461

The Trained Teacher

A HIGH-CLASS

TAMIL MONTHLY FOR TEACHERS

EDITOR

VOL. 16 JANUARY 1921 No. 1

OFFICE ... 28 JAN 1921

CONTENTS

1. AVVAYAR	*Editor*	1
2. A FIRST LESSON IN FRACTIONS	*K. Chakravarthi Aiyangar.*	3
3. A FEW VEGETABLES ...	*Sree Thanvanthri*	6
4. BUTTERFLY	—	8
5. MORAL STORIES FROM INDIAN HISTORY	*S. S. Arunagirinathan*	9
6. VOCATIONAL EDUCATION AGRICULTURE	*C. Venkatesan*	13
7. TEACHERS' CONFERENCE	*C. J. C. Rajagopla Aiyar.*	17

EDITOR — C. R. NAMASIVAYA MUDALIAR.

Madras:

C. COOMARASAWMY NAIDU & SONS.

நல்லாசிரியன்

(1921ஹு ஜனுவரிமீ 25உ வெளியானது)

பொருளடக்கம்

பக்கம்

1.	அவ்வையார் ...	... பத்திராதிபர்	1
2.	பின்னத்தில் முதற் பாடம்	K. சக்ரவர்த்தி ஐயங்கார்.	3
3.	சில காய்கறிகள் ...	... ஸ்ரீ தன்வந்தரி.	6
4.	வண்ணாத்திப் பூச்சி ...	... ... —	8
5.	சரித்திர சம்பந்தமான நீதிக் கதைகள்	எஸ். எஸ். அருணகிரிநாதன்	9
6.	கிருஷி ...	... C. வேங்கடேசன்	13
7.	எலிமென்டரி உபாத்தியாயர்களின் மகாநாடு	C. J. C. இராஜகோபால ஐயர்.	17

பத்திராதிபர் - கா. நமச்சிவாய முதலியார்

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

வெளியிடுவோர்

வருடச் சந்தா ஒன்றரை ரூபா] [தனிப் பிரதி 3 அணா

OFFICE OF THE ...
28 JAN 1921

நல்லாசிரியன்

1919௵ ஜூன்௴ முதல் 1920௵ மே௴ வரையில்

பதினைந்தாம் சம்புடம்

பத்திராதிபர் — கா. நமச்சிவாய முதலியார்

வெளியிடுவோர்

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1921

விலை ஒரு ரூபாய்

Printed at
The 'Caxton Press'
Madras.

CONTENTS

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	அடிமரம் — வகை வளர்ச்சி	277
2.	அதிவீரராம பாண்டியர்...	76
3.	அமெரிக்காவை கண்டுபிடித்தவர் கொலம்பஸா, இந்தியரா?	81
4.	அவ்வையாரும் அவர் இயற்றிய சிறு நூல்களும் ...	241, 265
5.	ஆங்கில ஆட்சியின் நன்மைகள்	117
6.	ஆதாரம் எது?	280
7.	ஆத்திசூடி	37
8.	இளமையிற் கல்	14
9.	இந்திய நாணயங்களின் வரலாறு	177, 201
10.	உபந்நியாசம்	70
11.	உஷ்ணம் பரவுதல்	249
12.	எறும்பும் புழுவும்	80
13.	எலிமெண்டரி உபாத்தியாயருக்கு ஏதும் கதியில்லையா?	193
14.	எலிமெண்டரி உபாத்தியாயர் சம்பளம்	217
15.	எனது இளமைப் பருவம்	123
16.	எனது பிள்ளைப் பருவம்	163, 189, 210, 228
17.	எழு புண்ணிய நகரங்கள்	219
18.	ஒரு பாட்டு	75
19.	கடவுள் அருள்	172
20.	கடவுளுக்கு இன்பம் கொடுப்பது எது?	112
21.	கணித போதனை	84, 157
22.	கதை சொல்லுதலும் அபிநயப் பாட்டுகளும் ...	195
23.	கதை சொல்லல்	19, 34, 63, 92
24.	கதையும் பாட்டும்	58, 151, 191, 214, 245
25.	கம்பர்	166, 182, 206
26.	காபிடேஷன் கிராண்டு	114
27.	கிரமசிக்ஷை — அதன் நோக்கம் அதற்கான ஏதுக்கள் ...	67
28.	கிருஷி	285
29.	கிழங்குகளிலிருந்து சர்க்கரை உண்டாக்குதல் ...	270
30.	கீழ்தரக் கல்வி	25
31.	குருபாத தாசர்	105
32.	சமாதானக் கொண்டாட்டம்	23

எண்	விஷயம்	பக்கம்
33.	சரித்திர சம்பந்தமான நீதிக் கதைகள்	273
34.	சுகாதார விஷயமாக வியாசம் எழுதல்	268
35.	செய்வன திருந்தச்செய்	145
36.	சேக்கிழார் சுவாமிகள்	28, 52
37.	தடுத்துக்கொள்ளக்கூடியவியாதிகள்	186, 232
38.	தண்ணீர் சுற்றி வருதல்	258
39.	தென் இந்திய அறிஞர்கள் ...	101, 136, 153, 176, 198, 236
40.	தொண்டரடிப்பொடி ஆழ்வார்	139
41.	நமது பதினைந்தாம் ஆண்டு	1
42.	நம்மாழ்வார்	4
43.	நீதிசார வாக்கியம்	223
44.	நீதிவாக்கியங்கள்	284
45.	பள்ளிக்கூடத்தில் தச்சவேலை	11, 45, 60
46.	பறவைகளின் முட்டைகள்	94
47.	பால போதம்	97, 121
48.	புராண கதைகள்	73
49.	பொங்கற் புதுநாள்	169
50.	பொங்கற் புதுநாள் வாழ்த்து விடை	209
51.	பொதுஜன வாழ்க்கையில் நாடகத்தின் நிலை	128
52.	போதனைமுறைப் பாடசாலைகளில் பாஷா பண்டிதர்களை நியமித்தல்	49
53.	மதம் அவசியமா?	134
54.	மதம் என்றால் என்ன?	89
55.	மனத்தை ஒருவழி நிறுத்தல்	225
56.	மாணாக்கனுக்கு அறிவுறுத்துதல்	55
57.	வாந்திபேதி	7, 40
58.	வித்தியா விஷயமாய் விளையாட்டின் பயன்	253
59.	விவேக பாஸ்கரன்	263
60.	வேர்கள் — பரவுதல், வகைகள்	142
61.	வைத்தியர் வருமுன் செய்யவேண்டிய சிகிச்சை ...	108
62.	ஸர் வால்டர் ரலே	160
63.	க்ஷேத்திர கணிதம்	148

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 16 | 1921ஹு ஜனுவரிமீ | மாதம் 1

AVVAYAR

அவ்வையார்

அவ்வையாருடைய தாய் தந்தையர், பிறப்பு வளர்ப்பு, அவரைப்பற்றிய கதைகள் முதலியவை பற்பல வகையில் பேதப்பட்டு வழங்குகின்றன. அவற்றை யெல்லாம் ஆராய்வதும், அவற்றுள் உண்மை இது, கட்டுக்கதை இது, தெரிந்து கூறியது இது, தெரியாமற் கூறியது இது என்பவற்றைத் துணிந்து உரைப்பதும் கூடாத காரியம். அவற்றை அவ்வாறு ஆராய்வதும் இங்கு நம்முடைய கருத்தன்று. அவர் இயற்றியனவாக ஆரம்ப பாடசாலைகளில் வழங்கும் நீதி நூல்களெல்லாம் அவர் இயற்றியனவா அல்லவா என்பதை ஆராய்வதே எமது கருத்தாகும்.

அவ்வையார் இயற்றியனவாகச், சங்கம் மருவிய நூல்களில், நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு புறநானூறு ஆகிய நூல்களில் சில பாட்டுக்கள் கிடைக்கின்றன. இவை யாவும் அவ்வையார் இன்ன காரணத்தால் இன்னார்மீது பாடியவை எனப் பெரும்பாலும் தெரிகின்றது. அவையன்றி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை என்னும் வாக்குண்டாம், நல்வழி, ஞானக்குறள், விநாயகரகவல், பந்தன் அந்தாதி, வைத்தியநிகண்டு, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, நான்மணிமாலை, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து என்னும் நூல்களும் அவர் இயற்றியன என்று கூறுகின்றனர்; இவற்றுள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய இந்நான்கும் ஆரம்ப பாடசாலைகளில் சிறுவர்களுக்குப் பாடமாக வழங்கி வருகின்றன. அவற்றைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

சங்க காலத்திருந்த நூல்களை பிற்காலத்தவர் தொகுத்து பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று முறைப்படுத்தி முடிவு கட்டி இருக்கின்றனர். அவற்றில்,

பத்துப் பாட்டுள் அடங்கிய நூல்கள்:

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப்படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக்காஞ்சி
7. நெடுநெல்வாடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம் என்பன.

எட்டுத்தொகை நூல்கள்:

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு என்பன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்:

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. கார் நாற்பது
4. களவழி நாற்பது
5. இன்னா நாற்பது
6. இனியவை நாற்பது
7. ஐந்திணை ஐம்பது
8. ஐந்திணை எழுபது

9. திணைமொழி ஐம்பது
10. திணைமாலை நூற்றைம்பது
11. திருக்குறள்
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி
15. சிறுபஞ்சமூலம்
16. முதுமொழிக்காஞ்சி
17. ஏலாதி
18. கைந்நிலை என்பன.

இங்கு இப் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களை நோக்கினால் பெரும்பாலன நீதி நூல்களாகக் காணப்படுகின்றன. அவற்றுள் திருக்குறளும் காணப்படுகின்றது. திருக்குறள் என்னும் அரிய நூலை இயற்றி யருளினவர் திருவள்ளுவர் என்பது பிரசித்தம். அவருடன் பிறந்த அவ்வையார் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய இந் நூல்களைச் செய்திருந்தால் அவற்றை இத் தொகை நூல்களோடு சேர்க்காமல் விடுவதற்கு நியாயமில்லை. ஆகவே, இந்த நூல்களைத் திருவள்ளுவருடன் பிறந்து சங்ககாலத்து இருந்து விளங்கிய அவ்வையார் செய்தனர் என்று கூறுவதற்கு ஆதாரமில்லை. இனி அந் நூல்களில் ஒவ்வொன்றையும் எடுத்துத் தனித்தனி ஆராய்வோம்.

பத்திராதிபர்.

A FIRST LESSON IN FRACTIONS

பின்னத்தில் முதற் பாடம்

சாதாரணமாக, கணிதபாடம் எல்லாவற்றிலும் பின்னம் ஸம்பந்தப்பட்டே வருகிறது. உதாரணமாக — (i) ஒருவனிடம் 576 ரூபாய் இருக்கிறது; அதில் மூன்றிலொருபாகம் கடன் கொடுத்த பிறகு மீதி எவ்வளவு? (ii) ஒரு பலம் நெய் $1\frac{1}{2}$ அணாவாக 15 அணாவுக்கு எத்தனை பலம் வாங்கலாம்? (iii) ஒன்று $7\frac{1}{2}$ ரூபாய் வீதம் 90 ரூபாய்க்கு எத்தனை மேஜைகள்? இக்கணக்குகளிலும், இவைபோன்ற வேறு கணக்குகளிலும் பின்னம் ஸம்பந்தப்பட்டு வருகிறது. ஒருவனுக்கு பின்னம் நன்றாய்த் தெரிந்தால் அவனுக்கு கணக்கு நன்றாய்த் தெரியும் என்றே சொல்லலாம். சாதாரண வகுத்தல் (Simple Division) முடிந்தவுடன், தொடர்கூட்டல் (Compound addition) ஆரம்பிக்கு முன்னமே பின்னங்களை ஆரம்பிப்-

பது உசிதமாகும். பிள்ளைகள் சிறுவர்களாய் இருக்கும் போதே பழம் முதலியவைகளைப் பங்கிடுவதனல் பின்னங்களை ஒருவாறு தெரிந்து கொள்ளுகிறுர்கள். மேல் வகுப்புக்களில் படித்து வரும் சிலர், பின்னக் கணக்குகள் வருங்கால் கஷ்டப்படுகிறுர்கள். ஆகையால், ஆரம்பத்திலேயே பிள்ளைகளுக்கு இப்பாடத்தை நன்கு விளங்கும்படி போதிப்பது அவசியமாகும். உபாத்தியாயர் பின்னத்தில் முதற்பாடத்தைப் பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது பின்னத்தில் எழுதியிருக்கும் எண்களையும், அதில் குறித்திருக்கும் குறியையும் நன்கு விளக்கவேண்டும். இப்பாடத்தை வர்ணக்காகிதங்கள், பழங்கள், குச்சுகள் முதலிய உபகரணங்களைக் கொண்டு போதிக்க வேண்டும்.

பின்னம்

வெவ்வேறு நிறமுள்ள சமமான மூன்று வர்ணக் கடிதங்களை மாணுக்கர்களுக்குக் காட்டி, எத்தனை என்று கேட்டல்.

ஒன்றை எடுத்துச் சமமில்லாத பல துண்டுகளாகக் கிழித்தல். கிழியாத மற்றொரு கடிதத்தைக் காட்டி 'முழுக்கடிதம்,' 'துண்டு கடிதம்' இவைகள் இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தைவிளக்குதல்.

பிறகு ஒரு கடிதத்தை எடுத்துக்கொண்டு இரண்டு சம பாகங்களாகக் கிழித்தல். அத்துண்டுகளில் ஒன்றை மாணுக்கர்களுக்குக் காட்டி அதுவும் துண்டு என்பதை வருவித்தல்.

'சம துண்டுகள்', 'சமமில்லாத துண்டுகள்' இவைகளைக் காட்டல். இரண்டிற்கு முள்ள வித்தியாசத்தை வருவித்து, 'சமபாகம்', 'சமமில்லாத பாகம்' என்பதைக் க. ப. இல் எழுதல்.

ஒவ்வொரு மாணுக்கனுக்கும் ஒவ்வொரு கடிதத்தைக் கொடுத்து 2, 4, 8, 16, முதலிய சமபாகங்களாக முறையே கிழிக்கும்படி பழக்குதல்.

ஒரு முழு வஸ்து பல சமபாகங்களாகச் செய்யப்பட்டால் ஒவ்வொரு சமபாகத்திற்கும் 'பின்னம்' என்று பெயர் என்பதைச் சொல்லுதல்; க. ப. இல் எழுதல்.

காகிதம், பழம் முதலியவற்றில் ஏதாவதொன்றை ஒவ்வொரு பிள்ளைக்கும் கொடுத்து அவைகளில் $\frac{1}{2}$, $\frac{3}{4}$, $\frac{5}{8}$, பாகங்களை முறையே கிழித்துக் கொடுக்கும்படி பரீக்ஷித்தல்.

பின்னத்தில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயங்கள் இரண்டு உள்ளன. அவையாவன: ஒரு முழு வஸ்துவைப் பல சமபாகங்களாகச் செய்வது, அவற்றுள் நமக்கு வேண்டிய பாகங்களை எடுத்துக் கொள்வது. இவைகளை மாணுக்கர்களிடமிருந்து வருவித்தல்.

பின்னத்தை எழுதலும், வாசித்தலும்

$\frac{1}{4}$ (கால்) என்பதை உதாரணமாக எடுத்துக்கொண்டு விளக்குதல். ஒரு பொருளை நாலாகப் பாகித்ததைத் தெரிவிக்க 4 என்னும் எண்ணும், அப்படிப்பட்ட பாகங்களில் நாம் எடுத்துக்கொண்ட பாகத்தைத் தெரிவிக்க ஒன்று என்னும் எண்ணும் வேண்டும் என்பதை வருவித்தல். ஒன்றை நாலாகப் பாகித்ததில் நாம் எடுத்துக்கொண்ட ஒரு பாகத்தைக் காட்ட ஒன்றை மேலும், நாலாகப் பாகித்ததைக் காட்ட 4 ஐக் கீழும், பாகித்ததைக் காட்டும் அடையாளமாகிய வகுத்தல் குறியை மத்தியிலும் எழுதவேண்டும் என்பதைச் சொல்லுதல். இதை வாசிக்கும்போது 'நாலில் ஒன்று' என்று வாசிக்கவேண்டும் என்பதைச் சொல்லுதல்.

ஒரு வஸ்து பிரிக்கப்பட்ட பாகத்தைக் காட்டும் எண்ணுக்குப் பகுதி எண் என்றும், பாகித்ததிலிருந்து நாம் எடுத்துக்கொண்டதைக் காட்டும் எண்ணுக்குத் தொகுதி எண் என்றும் பெயர் என்பதைச் சொல்லி க. ப. இல் எழுதல்.

தொகு = சேர்
பகு = பிரி } விளக்கி, க. ப. இல் எழுதல்.

பின்னங்களைச் சொல்லிக் க. ப. இல் எழுதச் செய்தல். க. ப. இல் வேறு பின்னங்களை எழுதி மாணுக்கர்களை வாசிக்கச் செய்தலாகிய அப்பியாசங்களைக் கொடுத்தல்.

K. CHAKRAVARTHI AIYANGAR,
Assistant, Model School, Govt. Training School,
Villupuram.

A FEW VEGETABLES

சில காய்கறிகள்

சுரைக்காய் — இது இரண்டுவகை. ஒன்று நீளமாயும், மற்றொன்று உருண்டையாயும் இருக்கும். இவ்விரண்டும் இனிப்பு, கைப்பு வேற்றுமைகளால் இரண்டுவகைப் படுகின்றன. அவைகளில் இனிப்புள்ள சுரைக்காயின் கறியானது குளிர்ச்சி யுண்டாக்கும்; பித்தத்தை சம்ஹரிக்கும்; புஷ்டியையும் பலத்தையும் உண்டாக்கும்; உருசியையுண்டாக்கும்; வாயுவைப் பிரகோபிக்கச் செய்யும்; கர்ப்ப ஸ்திரீகளுக்கு இதமுண்டுபண்ணும்; அச்மரி-மூத்திரகிருச்சிரம், மூத்திராகாதம், மூலநோய்கள் இவைகளில் இதமுண்டாக்கும்.

அத்திக்காய் — அத்திக்காய் இரண்டு வகையாயுள்ளது (1) நல்ல அத்தி என்றும், (2) பேய்அத்தி என்றும் வழக்கத்திலுள்ளன. இவ் விரண்டுமெல்லாமல் சீமை அத்தி என்பது மற்றொன்று. சீமையத்தி உருசியுள்ளது; புசித்தற்குரியது. நல்ல அத்திக்காயானது பழுத்தால் புழுக்களிருக்குமாதலால் அப்பழங்களைப் பெரும்பாலும் உபயோகிக்கமாட்டார்கள். இளங்காய்களைச் சமையல்செய்து உபயோகித்தல் பண்டையாசாரமாயுளது. இது குளிர்ச்சி செய்யும். இரத்தத்தைச் சுத்தமாக்கும். பித்தத்தை குறைக்கும். சரீரத்தினுடைய தாபத்தையும், தாகத்தையும் குறைக்கும். சிரமத்தைப் போக்கும். மூர்ச்சைகளில் நன்மையைத்தரும். பிரமேஹ சாமானியத்தையும், மதுமேஹம், வெகு மூத்திரம், அதிசாரம், இரத்தபித்தம், சர்மரோகங்கள், மூலநோய், சுவேதரக்தகுஸுமம (ஸ்திரீகளுக்குண்டாகும்) வியாதிகள், இவைகளில் நன்மையுண்டாக்கும், கர்ப்பரக்ஷணத்தைச் செய்யும்; முலைப்பாலை யதிகப்படுத்தும். நாள்தோறும் உபயோகிப்பதற் குரியதாய் சரீரத்திற்கு எத்தகைய தீங்கையும் விளைவிக்காத சாகங்களில் சேர்ந்திருக்கின்றது.

வெள்ளரிக்காய் — வெள்ளரிக்காயானது பலவகையானது. இதை ஆகாரத்திற்கு உபயோகப்படும்படி உபயோகிப்பதை நம்மவர்கள் அறிந்துள்ளார். சாமானியமாக வெள்ளரிக்காய் குளிர்-

ச்சி யுண்டாக்கும். பித்தத்தைக் குறைக்கும். மூத்திரகிருச்சிரம், மூத்திராகாதம் இவைகளில் நன்மையுண்டாக்கும், தாபத்தையும் மூர்ச்சையையும் நிவர்த்திக்கும்.

வாழைக்காய் — வாழைக்காய்களில் சாகமாக உபயோகிப்பதற்கு இளம்பிஞ்சுகள் நல்லவை. சமமான சீதோஷ்ணத்தைச் செய்யும். இரத்தபித்தங்களைப் போக்கும். உருசியை யுண்டாக்கும். புஷ்டியைத் தரும். கபத்தை யுண்டாக்கும். நன்றாகப் பக்குவம் செய்தாலல்லது சீக்கிரமாக ஜீர்ணமாக மாட்டாது. இதினுடைய புஷ்பம் (வாழைப்பூ) காய்களுக்குச் சொல்லியுள்ள குணங்களையடைந்திருக்கின்றது. மற்றும் ஆமாதிசாரம், இரத்தப்பிரதரம், சுவேதப்பிரதரம் இவைகளில் நன்மையைத்தரும். கிருமிகளைப் போக்கும். வாழைத்தண்டு மூத்திரத்தை யதிகப்படுத்தும். மூத்திரப்பிண்டங்களிலும் (குண்டிக்காய்கள்), மூத்திரப்பையிலும் உண்டாகும் அச்மரி, விகதவியாதிகளில் நன்மை யுண்டாக்கும்; மூத்திர கிருச்சிரம், மூத்திரகாதம், விரணப்பிரமேஹம் (கிரந்திப்புண்) இவைகளில் நன்மையைத் தரும்.

விளாங்காய் — கபத்தைப் போக்ககடிக்கும், ஸ்வரபங்கத் (தொண்டைக்கட்டுவ)தை யுண்டாக்கும், அதிசாரங்களில் நல்லது. விளாம்பழம் சுவாஸம், காஸம், ஜ்வரம் முதலிய நோய்களில் இதமுண்டாக்கும். அரோசகத்திலும், வாந்தியிலும் நன்மை யுண்டாக்கும். விஷம் முதலியவை வியாபித்த சரீரத்திற்கு அதிகபிரயோசனத்தைத் தருவது. அதிகமாகப் புசித்தால் அக்கினிமாந்தியத்தை யுண்டாக்கும். தினந்தோறும் உபயோகிப்பதால் சரீரத்திற்கு ஆரோக்கியத்தை யுண்டாக்கும். சாப்பிட்டபிறகு நன்றாகப் பழுத்தபழத்தை யுபயோகித்தால் ஆரோக்கியத் தன்மையைக் காப்பாற்றுவ தாகும்.

ஸ்ரீ தன்வந்தரி.

BUTTERFLY

வண்ணாத்திப் பூச்சி

சிறகுகள்:—சிறகுகள் நான்கு. அவை ஒளி ஊடுருவத்தக்கவை. ஆனால் அச்சிறகுகளின்மேல் படியும் புழுதியினால் அது ஒளியற்றதாகிவிடுகிறது. அதன்மேல் படிந்திருக்கும் புழுதி வண்ணாத்திப் பூச்சியின் உடல் முழுதும் ஒரு வீட்டிற்கு ஓடிட்ட விதமாக ஒழுங்காகப் படிந்திருப்பதைப் பூதக்கண்ணாடியின் சகாயத்தால் காணலாம்.





தலை :— வண்ணாத்திப் பூச்சிக்குப் பல பாகங்கள் கூடிய கண்களிருப்பதால் அவை எதையும் நன்றாய்ப் பார்க்கக்கூடிய சக்தியுடையன. வானவில்லுக்குரிய பலவித வர்ணப் பிரகாசத்தைக்கொடுக்கக்கூடிய வெளிப்போர்வை அவைகளுக்கு உள்ளன. பொருள்களை ஸ்பரிசித்து அறிந்து கொள்வதற்காக அவைகளுக்கு ஏற்பட்டுள்ள இரண்டு ஸ்பரிசனிகள் பல பகுதிகளை யுடையனவாய் இணைந்து சுலபமாக அசைக்கக் கூடியவையா யிருக்கின்றன. அந்தப் பூச்சி தன் உணவை அருந்தும்போது தன்னுடைய துதிக்கையை உபயோகப் படுத்துகிறது.

தேகம் :— வண்ணாத்திப் பூச்சியின் தேகத்தின் பின் பகுதி வளயங்கள் கோக்கப்பட்டது போல் அமைந்திருக்கின்றது. இப்படி இருப்பவைகட்குப் பொருத்துடம்புள்ளவை என்று பெயர்.

மார்புக்கவசம்:—இவைகளின் தேகத்தில் மார்பிலிருந்துதான் கால்களும் சிறகுகளும் முளைத்திருக்கின்றன.

கால்கள்: — ஆறு கால்கள் இருக்கின்றன; ஆனால், நான்கு கால்களைத்தான் அது உபயோகிக்கின்றது. முன்னங்கால்கள் இரண்டையும் அநேகமாகத் தேகத்திலுள்ள மயிரில் மறைத்து வைத்துக் கொள்கின்றது.

MORAL STORIES FROM INDIAN HISTORY

சரித்திர சம்பந்தமான நீதிக் கதைகள்

ஷாஜிஹான்

'வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை.'

ஆக்ரா நகரத்தில் யமுனையாற்றங் கரையில் கட்டப்பட்டிருக்கும் 'தாஜ்மஹால்' என்னும் அழகிய கட்டடத்தைப்பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்குமே! அதைப்போல் அழகான கட்டடம் உலகத்தில் எங்கும் கிடையாதாம். அது வெண்ணிறச் சலவைக் கற்களால் கட்டப்பட்டு உட்புறத்தில் இரத்தினங்கள் இழைக்கப் பெற்றிருக்கின்றது. அது கட்டி முடிந்து பல நூறுவருஷங்கள் ஆயின. ஆயினும், அதைப் பார்ப்பவர்கள் அது நேற்றுத்தான் கட்டப்பட்டதோ என்று நினைக்கும்படி அவ்வளவு புத்தம் புதிதாய்க் காணப்படுகின்றது! அதைக் கட்டிமுடிப்பதற்கு முப்பது லக்ஷம் ரூபாயும் முப்பது வருஷகாலமும் ஆயிற்றும்!

அப்படிப்பட்ட அருமையான கட்டடத்தைக் கட்டி முடித்தவர் யார் தெரியுமா? அவர்தான் மகம்மதிய அரசர்களில் ஒருவரான ஷாஜிஹான் என்பவர். இப்போது அவரைப்பற்றியே சொல்லப்போகிறேம்.

ஷாஜிஹான் மிகவும் நல்லவரென்றும் மகான் என்றும் பேர் பெற்ற அக்பர் சக்கரவர்த்தியின் பேரன். ஷாஜிஹான் அக்பருடைய குமாரரான ஸாலிம் அல்லது ஜிஹாங்கிர் என்பவருக்கு ஒரு ராஜபுத்திர ஸ்திரீயிடத்தில் பிறந்தவர். அவர் அரசர்களுக்குத் தெரியவேண்டிய விஷயங்களைக் கற்று வாலிபதசையை அடைந்தார். அப்போது அவருக்குத் தம் தந்தையாகிய ஜிஹாங்கிர் இறந்த பிறகுதாமே நாம் சக்கரவர்த்தி ஆகவேண்டும் என்னும் கவலை இருந்தது. அந்தக் கவலை நாளுக்குநாள் அதிகப்பட்டது.

ஜிஹாங்கிருக்கு நூர்ஜஹான் அல்லது ஜகஜ்ஜோதி என்னும் பெயருடைய ஓர் அழகிய மனைவியிருந்தாள். ஜிஹாங்கிர் அவள் இஷ்டப்படியே அரசுபுரிந்து வந்தார். நூர்ஜஹானுக்குத் தன் புருஷனுக்குப் பிறகு தன்னுடைய மகனே சக்கரவர்த்தி ஆகவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அந்த எண்ணம் ஜிஹாங்கிருக்குத் தெரிந்தது. அதனல் அவருக்கு அதிக வருத்தமும் கோபமும் உண்டாயின. அதனல் அவர் தம் தந்தைக்கு விரோதமாகப் பலவிதச் சில்லரைக் கலகங்களை உண்டாக்கினர். அதனல் ஜிஹாங்கிர் மிகவும் மனம் வருந்தினர். அந்த வருத்தமே அவர் மரணத்திற்குக் காரணமாய் இருந்து அவரைக் கொன்றது. தன் தந்தையின் மரணத்திற்குக் காரணமாயிருந்த ஷாஜிஹானைப் பார்த்தீர்களா!

ஷாஜிஹான்

தம் தந்தை இறந்தவுடன் நூர்ஜஹானுடைய எண்ணம் ஈடேருதபடி தமது திறமையால் ஷாஜிஹானே சக்கரவர்த்தியானர். ஆனல் அவர் சக்கரவர்த்தி ஆனதும் நூர்ஜஹானை ஒன்றும் துன்பப்படுத்தவில்லை. அவளுக்கு அவ்வப்போது வேண்டிய அளவு பொருள் கொடுத்து மரியாதையாகவே நடத்தி வந்தார். ஆனல், அவருக்குத் தம்முடைய சகோதரர்களும் அவர்களுடைய பிள்ளை-

களும் எங்கே இராஜ்யத்திற்காகத் தம்மை எதிர்க்கப் போகிறார்களோ என்னும் பயம் கொஞ்சம் இருந்தது. அதனால் அவர் சக்கரவர்த்தி ஆனதும் தமது சகோதரர்களையும் அவர்களுடைய பிள்ளைகளையும் பலவிதமாகக் கொலைசெய்து விட்டார்! இராஜ்யத்தின் பேரில் இருந்த ஆசையே அவரை அப்படிப்பட்ட கோரமான கொலைகளைச் செய்யத் தூண்டியது! இந்த அநியாயத்தை அறிந்த நூர்ஜஹான் துக்கித்தாள்; ஜனங்கள் மனத்திற்குள் அரசனை வெறுத்தார்கள். யார் என்ன செய்யமுடியும்! கடவுள்தான் கவனிக்க வேண்டும்!

ஷாஜிஹான் முதலில் இப்படிப் பல அநியாயங்களைச் செய்தாலும் அவர் தந்தையைவிடக் கொஞ்சம் நன்றாகவே அரசாட்சி செய்தார். பிறகு அவர் அழகில் சிறந்த மும்தாஜ்மஹால் என்னும் ஒரு பாரசீக ஸ்திரீயைக் கலியாணம் செய்துகொண்டார். கலியாணம் ஆன பதினான்காம் வருஷம் மும்தாஜ்மஹால் இறந்தாள். அவள் இறக்கும்போது தன் கணவனைப் பார்த்து, தன் பெயர் என்றைக்கும் விளங்கும்படி, தன் சவத்தைப் புதைக்கும் இடத்தில் ஓர் அழகான கட்டடம் கட்டவேண்டும் என்றும் இனிமேல் ஒரு ஸ்திரீயையும் விவாகம் செய்து கொள்ளக் கூடாதென்றும் சொன்னாள். ஷாஜிஹானும் அவள் இஷ்டப்படியே நடந்து கொண்டார். அவளுக்காக அவளைப் புதைத்த இடத்தில் அவரால் கட்டப்பட்ட கட்டடந்தான் 'தாஜ்மஹால்' என்பது. ஷாஜிஹான் இன்னும் பல அழகான கட்டடங்களைக் கட்டி இருக்கின்றார். அவைகளில் முக்கியமானவை டில்லியிலுள்ள ஜும்மா மசூதியும், ஆக்ராவில் உள்ள முத்து மசூதியுமாகும். இதைப்பற்றியெல்லாம் நமக்கென்ன, சகோதரர்களையும் குழந்தைகளையும் அநியாயமாகக் கொலை செய்தவரும், தம் தந்தையினுடைய மரணத்துக்குக் காரணமாய் இருந்தவரும் ஆகிய ஷாஜிஹானுடைய கதி கடைசியில் எப்படி ஆயிற்று, பார்ப்போம்.

மும்தாஜ்மஹால்

ஷாஜிஹான் தம்முடைய எழுபதாம் வயதில் கடுமையான வியாதியால் கஷ்டப்பட்டார். எல்லோரும் அவர் இனிப் பிழைக்க மாட்டார் என்றே எண்ணிவிட்டார்கள்.

அப்போது அவருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் தந்தைக்குப் பிறகு தாங்களே சக்கரவர்த்தி ஆகவேண்டும் என்ற அவா இருந்தது. அதனால் அவர்களுக்குள் கடுமையான சண்டை நடந்தது. மூன்றும் குமாரரான ஔரங்கசீப் தம் மூன்று சகோதரர்களையும் கொன்றுவிட்டு, சிம்ஹாசனம் ஏறிச் சக்கரவர்த்தி ஆனார். அப்போது சாகக்கிடந்த ஷாஜிஹான் சௌக்கிய மடைந்தார். அதைக் கண்ட அவர் மகனாகிய ஔரங்கசீப் அவரைப் பிடித்து சிறைச்சாலையில் அடைத்து விட்டார். ஷாஜிஹான் முன்னே தம் தந்தை சாகக்காரணமாய் இருந்து, தமது சகோதரர்களைக் கொலை செய்தவர் அல்லவா? அதனால் இப்போது அவருக்கு ஒருவரும் உதவிசெய்ய வரவில்லை.

ஷாஜிஹானுக்குத் தாம் சிறைச்சாலையில் இருப்பது மிகவும் கஷ்டமாய் இருந்தது. அப்போது அவர்பட்ட மனவருத்தத்திற்கு அளவில்லை. என்ன செய்யலாம்! அவரே பிறகு ஒருவாறு மனம் தேறினார். அப்போது அவர், 'என்ன செய்கிறது. தன் வினை தன்னைத்தானே சாரும்? நான் எனது தந்தையின் மரணத்திற்குக் காரணமாய் இருந்தேன். என் சகோதரர்களையும் அவர்களுடைய குழந்தைகளையும் அநியாயமாய்க் கொலை செய்தேன். இதோ அந்தப் பாவத்தை இங்கேயே அனுபவிக்கிறேன். நிலையில்லாத இந்த ராஜ்யத்தை நிலை உடையது என்று நம்பி அந்தக் கொலைகளைச் செய்தேன். இப்போது இராஜ்யம் போய்விட்டது. நான்செய்த பாவம் என்னோடு இருக்கிறது. மற்றவர்களுக்குத் தீங்கு செய்தால் அதை நாமே அனுபவிக்க வேண்டும் என்பதை இப்போதுதான் அறிந்தேன். என்னால் என் தந்தை இறந்தார். இப்போது என் பிள்ளையால் நான் சாகப்போகிறேன். இதுதான் பழிக்குப் பழி; கடவுளின் தண்டனை' என்று தமது குற்றத்தை நினைத்து தினமும் துக்கப்பட்டுக்கொண்டே சிறைச்சாலையில் எழு வருஷங்களைப்போக்கிக் கடைசியாக அங்கேயே மரணமடைந்தார்.

தந்தை தெய்வத்திற்குச் சமானம் அல்லவா? அப்படிப்பட்ட தமது தந்தையை மரணமடையச் செய்து, சகோதரர்களைக்

கொன்ற ஷாஜிஹானுடைய அந்தியகாலம் எப்படி முடிந்தது பார்த்தீர்களா!

'தாம்தாம்முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்'

என்னும் வார்த்தைப் பொய்யாகுமா!

எஸ். எஸ். அருணகிரிநாதன்.

VOCATIONAL EDUCATION AGRICULTURE

கிருஷி

(முன்தொடர்ச்சி வயது 15 பக்கம் - 288.)

(3) உலோக வகைகள்:— இரும்பு, ஈயம், செம்பு, தங்கம், வெள்ளி. கிடைக்கும் இடமும் உபயோகமும்.

போக்கு வரவுக்குரிய சாதனங்கள்; பட்டணங்கள், வியாபாரம், கைத்தொழில்.

பிளான் வரைதல் :— படம் வரைதல்

தாவர சாஸ்திரம்.

1. செடியின் அவயவங்களும் உபயோகங்களும்.
2. விதை, முளைத்தல், பாங்கு பார்த்தல், வளர்ச்சி, அறுவடை, உபயோகம்.
3. செடியின் உணவு, இருக்கும் இடம், உபயோகிக்கவேண்டிய எரு, இரசவாத பரிசோதனை.
4. கிருஷிக்கு உரிய கருவிகள், அவைகளின் உபயோகங்கள்.
5. பயிர் மாற்றல், ஆற்றல்.
6. விளைச்சல் அரியும் விதம்.
7. விதைபொறுக்கல், காப்பாற்றல்.
8. தாவரங்களுக்குரிய நோய்கள், விலக்கும்முறை, பூச்சி, புழு, அவைகளின் அமைப்பு.

பொது அறிவு.

1. கனபதார்த்தம், ஜலபதார்த்தம், வாயுபதார்த்தம், தன்மைகள், மாறுதல்கள்.

2. கரையும் பொருள், கரையாப்பொருள்.

3. உலோக வகை.

4. நீர்வாழ்வன, ஊர்வன, பக்ஷிகள், மிருகங்கள், கிருஷித்தொழிலுக்கு உபயோகமாகும் வரை இரசவாத பரிசோதனையோ தேகதத்துவ சாத்திரமோ அறிதல்.

5. முக்கிய யந்திரங்கள்—Compass, Magnet, Ravgauge' Syphon, Airpump, Water-pump, Barometer, Thermometer, Manual Occupation.

முத்துவைத்தல், குச்சுவைத்தல், காகிதம் மடித்தல், கத்தரித்தல், அட்டைவேலை, களிமண்வேலை, ஓலைவேலை, விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளின் மாதிரி, சிறுவீடு கட்டல், சுவர்வைத்தல், செங்கல் சுண்ணம்பு செய்தல்.

சித்திரம்.

மேலே காட்டிய பாடங்களுக்கு ஏற்பச் சித்திரம் வரைதல், பிளான் வரைதல்.

தேக அப்பியாசங்கள்.

1. கவாத்து, தண்டால், ஓட்டம், கழிவித்தை, ஆள் ஏற்றம், கபிலை ஏற்றம்.

2. நீந்தல், முழுகல், கிணறுகளில் சாமான்கள் எடுத்தல்.

3. மண்வெட்டல், உழுதல், களையெடுத்தல், பாத்தி கட்டல், சமப்படுத்தல், மரம் வெட்டல்.

தேச பரிபாலனமும் இந்துதேச சரித்திரமும்.

1. தபால், தந்தி இலாக்கா.

2. கிராம தபால்காரனும் அவனுடைய வேலைகளும்.

3. கடிதங்களைச் சேர்த்தல், அனுப்புதல், பட்டுவாடா செய்தல்.

4. மணியார்டர், ஸேவிங்ஸ் பாங்க்.

5. குற்ற விசாரணைக் (கிரிமினல்) கோர்ட்டுகள் :— கிராமமாஜிஸ்டிரேட் முதல் ஜில்லா கலெக்டர் வரையில் அதிகாரிகளின் வரம்பும் வேலையும்.

6. ஸிவில் கோர்ட்டுகள் :— கிராம முனிசீபு, கிராம பஞ்சாயத்து, ஜில்லா முனிசிப்புக் கோர்ட்டுகள், அவைகளின் வேலைகள், அதிகார வரம்புகள்.

7. வரிகளும், அவைகளின் உபயோகமும், அவசியமும்.

8. நிலத் தீர்வை இலாக்கா:—கிராமாதிகாரிகள் முதல் கலெக்டர் வரையில் அதிகாரிகளும் அவர்கள் வேலையும்.

9. வித்யா இலாக்கா :—(a) இன்ஸ்பெக்டிங் ஆபீஸர்களும் அவர்கள் வேலைகளும். (b) சர்க்காரால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள், திரவியசகாயம் பெறும் பாடசாலைகள், திரவிய சகாயம் பெறாத பாடசாலைகள்.

B. 1. ராமர், புத்தர் இவர்களுடைய சரித்திரம்.

2. இங்கிலீஷ் ராஜாங்கத்தால் இந்தியாவுக்கு ஏற்பட்ட நன்மைகள்.

3. ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி, மேரிசக்கரவர்த்தினி அவர்களுடைய சரித்திரம்.

4. (1) மதுரை, (2) அக்பர், (3) சிவஜி, (4) செண்ட் ஜார்ஜ் கோட்டை, (5) புதுச்சேரி, (6) லார்ட் கிளைவ், (7) இங்கிலீஷ்காரர் இந்தியாவை ஜயித்த விதம், (8) இங்கிலீஷ் காரரால் இந்தியாவுக்கு ஏற்பட்ட நன்மைகள், (9) விக்டோரியா மஹாராணி, ஏழாம் எட்வர்ட், ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி இவர்களின் சரித்திரம்.

C. VENKATESAN,
Sub- Asst. Inspector of Schools,
Ambasamudram

கிழமை	காலை								மாலை							ஷரா
	30 நிமிஷம்	20 நிமிஷம்	20 நிமிஷம்	20 நிமிஷம்	10 நிமிஷம்	30 நிமிஷம்	20 நிமிஷம்		30 நிமிஷம்	20 நிமிஷம்	30 நிமிஷம்	20 நிமிஷம்	10 நிமிஷம்	20 நிமிஷம்	20 நிமிஷம்	
திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி	வாசகம்	பார்த்தெழுதல்	கிண்டர்கார்ட்டன் தொழில்கள்	கதை சொல்லுதல்	ஓய்வு நேரம்	இயற்கை யறிவு	சித்திரம் வரைதல்	மத்தியான போஜனம்	கணக்கு	சொல்லெழுதல்	சுகாதார விஷயம்	செய்யுள் அல்லது நீதி வாக்கியம்	ஓய்வு நேரம்	பாட்டும் தேகாப்பியாசமும்	விளையாட்டுக்கள்	

கிழமை	மாலை					காலை				ஷரா
	50 நிமிஷம்	40 நிமிஷம்	10 நிமிஷம்	50 நிமிஷம்		50 நிமிஷம்	40 நிமிஷம்	10 நிமிஷம்	50 நிமிஷம்	
திங்கள்	தமிழ்	பொது அறிவு	ஓய்வு நேரம்	பூகோள சாஸ்திரம்	மத்தியான போஜனம்	எண் இடேலை	தாவரசாஸ்திரம்	ஓய்வு நேரம்	டிரில்	
செவ்வாய்		தேசசரித்திரம்					ஷை		டிராயிங்	
புதன்		பொது அறிவு					தோட்ட வேலை		கைத்தொழில்	
வியாழம்		தேசசரித்திரம்					தாவரசாஸ்திரம்		டிரில்	
வெள்ளி		பொது அறிவு					தோட்ட வேலை		கைத்தொழில்	

THE CONFERENCE OF THE ELEMENTARY SCHOOL TEACHERS, TANJORE DISTRICT.

தஞ்சை ஜில்லா ஆரம்பபாடசாலை
உபாத்தியாயர்களின் மகாநாடு, கும்பகோணம்.

24—10—20.

உபசரணைச் சபைத்தலைவர்

கல்லூர், ஜோ. க. இராஜகோபால ஐயர் அவர்கள்

செய்த

உபநியாசம்.

முன்னுரை.

ஆசிரியன்மார்களே, கனவான்களே,

சோழவளநாட்டிற்கு நாடு நாயகம்போன்றதும், ஒரு காலத்தில் நமது தஞ்சை ஜில்லாவுக்குத் தலைநகராக இருந்ததும், சரித்திர சம்பந்தமான புராதன நகரங்களுள் ஒன்றாயதும், எல்லாமதத்தினரும் தத்தம் இஷ்டதெய்வதைகளை வாழ்த்தி வழிபடுவதற்குத் துணையாகப் பல தேவாலயங்களைத் தன்னகத்துக்கொண்டதும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளது பிரதான மடங்களுள் ஒன்றைப் பெற்றிருப்பதும், காவிரி அரிசில் என்ற இரண்டு நதிகளால் அலங்கரிக்கப் பெற்றதும், கல்வி விஷயத்திலே 'தென்னிந்திய கேம்ரிட்ஜ்' என்ற சிறப்புப் பெயரைப்பெற்றதும், காலஞ் சென்ற கணிதமேதாவி ஸ்ரீமான் இராமானுஜம் போன்ற பல மேதாவிகளுக்குத் தாயகமாயிருப்பதும், பல அறிவாளர்களாகிய பெரியோர்களைப் பெற்றிருப்பதும் ஆகிய பெருமைபொருந்திய கும்பகோணம் எனப்பெயரிய இந்த நகரத்திற்கு, நமது வழித்தோன்றல்களாகிய சிறுவர் சிறுமியர்களின் அறிவுவளர்ச்சிக்கு ஆதாரமான ஆரம்பக்கல்வியின் வளர்ச்சிக்கேற்ற சீர்திருத்தங்களைச் செய்வதற்கென்று, இந்த உபசரணைச்சபையாரின் வேண்டுகோளுக்கிரங்கி ஜில்லாவின் பல பாகங்களி லிருந்தும் பிறஇடங்களிலிருந்தும் சரீர சிரமத்தையும் பொருட்செலவு காலச்செலவுகளையும் பொருட்படுத்தாது எழுந்தருளியிருக்கும் உங்களனைவரையும் என் பொருட்டும் உபசரணைச் சபையாரின் பொருட்டும் நான் முழு

மனத்துடன் நல்வரவுகூறி வரவேற்கின்றேன். மிகப்பெரிய பெருமைக்குரிய உங்களை முன்னின்று வரவேற்கும் பாக்கியத்தை வலியப்புகுவித்த உபசரணைச் சபையாருக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இந்தச் சமயத்திலே உபசரணைச் சபைத்தலைவன் என்றமுறைமையில் இம்மகாநாட்டிலே ஆராயத்தக்கனவாக என் மனத்தே தோன்றிய சிலவற்றைக் கூறுகிறேன். அவற்றை ஏற்றவாறு கொண்டு ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டுகிறேன்.

ஆரம்பக்கல்வியும் அரசாங்கமும்.

உலகத்திலே மனிதராகப் பிறந்தார் அனைவரும் கைக்கொள்ள வேண்டுவன அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்கள். இந்த நான்கையும் ஒருசேரக் கொடுக்கக்கூடியது கல்வியே. (கற்றல் என்பது பல நூல்களிலிருந்து பல விஷயங்களைப் படித்து தெரிந்து கொள்ளுதல் எனப் பொருள்படும். நூல்களையும் கற்றலையும் பற்றிப் பேசுவதென்றால் இது விரியும்.) இத்தகைய கல்வியை எவரும் எளிதில் அடைய முதல்துணையாயிருப்பது, உங்களது தொழிலின் பயனால் விளையும் இந்த மூலாதாரக் கல்வியே. 'இளமையிற்கல்வி சிலையில்எழுத்து' என்பது நமது நாட்டுப் பழமொழி.

இதன் அவசியத்தை நன்குணர்ந்தே 1869-ம் வருஷம் முதற்கொண்டு நமது தேசத்தலைவர்கள் இதனை இலவசமாகவும் கட்டாயமாகவும் செய்துதரவேண்டும் என்று அவ்வப்பொழுது துரைத்தனத்தாரை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். காலஞ்சென்ற ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோகலே அவர்கள் இந்திய (இராஜப்பிரதிநிதி) சட்டசபையிலே வரவுசெலவைப் பற்றிய விவாதகாலங்களிலெல்லாம் வற்புறுத்திவந்ததுடன் 1911-ம் வருஷத்தில் ஒரு மசோதாவையும் கொண்டுவந்தார்கள்.

நமது நாடோ ஆயிரத்து ஐந்நூற்றுத் தொண்ணூற்று நான்கு நகரங்களையும், ஐந்துலட்சத்து எண்பத்திராயிரத்து எழுநூற்று இருபத்தெட்டுக் கிராமங்களையும், முப்பத்து மூன்று கோடி ஜனங்களையும் கொண்டது. இவ்வளவிற்கும் ஒருலட்சத்து இருபத்து மூவாயிரத்து ஐந்நூற்று எழுபத்து எட்டுப் பள்ளிக்கூடங்களே இருக்கின்றன. ஒருகிராமத்திற்குப் பல பள்ளிக்கூடங்கள் தற்காலம் தேவையாயிருக்க, ஒரு கிராமத்திற்கு ஒரு பள்ளிக்கூடங்கூட இல்லாத நிலையில் நமதுநாடு இருக்கின்றது என்பது இதனால் விளங்கும். தவிரச் சராசரி நூற்றுக்கு ஆறு பெயர்களையே எழுத்து

வாசனைதெரிந்தவர்களாகப் பெற்றிருப்பதும், தலைக்கு ஒரு அணா வீதம் ஆரம்பக்கல்விக்குச்செலவு செய்துவருவதும் உலகத்தில் நமது தேசத்தைத் தவிர வேறு எந்த தேசமுமில்லை!

"தங்கள் தங்கள் தேசத்திலுள்ள குழந்தைகளைப் படிக்கும்படி கட்டாயப் படுத்துவதும், செலவு செய்யாமலே கற்கும்படி செய்வதும் தங்கள் கடமை என்று நாகரிக தேசங்களின் கவர்ன்மெண்டுகள் ஒத்துக்கொண்டு அவ்வாறே நடத்திவருகின்றன. பரோடா சமஸ்தானத்தில் கேக்வார் மகாராஜா அப்படி திரிசெய்ய ஏற்பாடு செய்துவிட்டார். அவர் செய்யக்கூடியது இந்தியாவில் இந்தியாகவர்ன்மெண்டும் செய்யக்கூடியதுதான்" என்று ஸ்ரீமான் கோகலே அவர்கள் எடுத்துக்காட்டி வற்புறுத்திய ஐந்து வருஷங்களுக்குப் பிறகு இந்தியாகவர்ன்மெண்டார் "இப்பொழுதுள்ள ஒரு லட்சம் பிரைமரிப்பள்ளிக்கூடங்கள் தவிர இன்னும் தொண்ணூற்றோராயிரம் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி, இப்பொழுது படித்துவரும் நாற்பத்தைந்து லட்சம் பிள்ளைகளைத் தொண்ணூறு லட்சம் பிள்ளைகளாக்கிவிடவேண்டும் என்பது கவர்ன்மெண்டின் உத்தேசம்" என்று 1913 ஆம் வருஷத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இவர்கள் உத்தேசப்படி உடனே நிறைவேற்றப்பட்டாலும் நமது நாட்டில் பாக்கி நூற்றுக்குசுமார் எண்பத்தெட்டு பேர் எழுத்துவாசனை அற்றவர்களாகவே இருக்க நேரிடும். இந்த உத்தேசம் எவ்வளவு பயனைத்தந்திருக்கின்றது என்பதும் அடுத்த வருஷ ஜனகணிதியில் விளங்கிவிடும். நிற்க, இப்படி இந்த மிக முக்கியமான விஷயத்தில் நமது கவர்ன்மெண்டார் உத்தேசம் பண்ணுவார்களானால், அது நமது தேசத்தின் ஆரம்பக்கல்வியின் வளர்ச்சியை இன்னும் எத்தனை தலைமுறைக்கு நீடிக்கச்செய்யுமென்பது கவனிக்கத்தக்கது. கோகலே அவர்கள் போட்ட உத்தேச வருஷங்களுக்கும் அதிகம் ஆகும் என்பது திண்ணம்.

இங்கிலையில், சென்னைமாகாண துரைத்தனத்தார் ஆரம்பக் கல்விமசோதா ஒன்றைக்கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அம்மசோதா சம்பந்தமாகச் சட்டசபையிலே நடந்த விவாத முறைமையையும், அது நிறைவேறியிருக்கும் பான்மையையும் கவனிக்கையில் அதுவும் நமது தற்காலத்தேவைக்குப்போதிய அளவு துணைசெய்யக்கூடாத நிலையிலேயே அமைந்திருக்கிறது என்பது நன்கு விளங்கும். எதற்கும் 'வரிபோடு, வரிபோடு' என்ற பேச்சே முன் நிற்கின்றது. நிலச்சுவான்தார்களென்றால் என்ன! அவ்வளவு எளிதானவர்களா? 'வரிச்சுமை அதிகமாயிருக்கின்றது; இனி வேறுவரி போடத்தக்க இடமே இருத்தலாகாது' என்று எத்தனை நரசிம்மம் எடுத்து நியாயங்கூறினாலும் பயன்படு

கின்றதில்லை. கிறிஸ்தவர் தமது மதத்தைப் பிரசாரஞ் செய்வதற்கு இந்தியாவில் இந்தியர்கள் ஏன் வரி கொடுக்கவேண்டுமோ தெரியவில்லை? 'ஜில்லா சபை' விஷயமோவென்றால், அஃது இனித் தனித்துப் (பாதிரிமார்களைத்தவிர) பள்ளிக்கூடங்களை நிர்வகித்து வருபவர்களுக்குப் போதிய உதவிசெய்யக்கூடிய மாதிரியில் அமையவில்லை. அவர்களுடைய கஷ்டநஷ்டங்களை விரித்துரைக்கத்தக்க பிரதிநிதிகளுக்கு அதில் இடமில்லை. 'ஜில்லா சபையால் மிஷினரிகளின் பள்ளிக்கூடங்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படலாகாது' என்பது மாத்திரம் சட்ட சபையில் மறவாது நினைப்பூட்டப் படுகிறது. இந்த 'ஜில்லா சபை' சம்பந்தமாகத் திருத்தஞ்செய்ய எத்தனை வேங்கடபதி முயன்றாலும் அதுவும் பயன்படுகின்றதில்லை. என்செய்வது! அந்நிலையிலேதான் நாமும் நமது கடமையைச் செய்து தீரவேண்டியவர்களாயிருக்கிறோம்!

"கல்வியானது பாமரஜனங்களுக்குள் எவ்வளவு பரவி இருக்கிறதோ அவ்வளவு அவர்களுடைய வாழ்வுக்குரிய சாதனங்களும் அறிவின் அபிவிருத்தியும் உண்டாயிருப்பதாக நாம் வைத்துக்கொள்ளலாம். 1911-ஆம் வருஷத்திய ஜனக்கணித கணக்கைப் பார்த்தால் ஜனத்தொகையில் 'ஆயிரம்பெயர்களுக்கு ஐம்பத்தொன்பது பெயர்களே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களென்பது தெரியவருகிறது. மெஜாரிடி கமிஷனர்களுடையரிப்போர்ட்டின் 18-வது பிரிவில் இந்தியாவிலுள்ள பலகோடி ஜனங்களின் நன்மையில் படித்த வகுப்பாருக்குச் சிரத்தைஇல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால், உண்மையென்னவென்றால், சிறிது காலமாகப் படித்தவகுப்பார் பாமரஜனங்களின் நன்மையில் அந்தரங்க சுத்தியுடன் சிரத்தை எடுத்துக்கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதே. ஜனங்களுக்கெல்லாம் கல்விபோதிக்க ஏற்பாடு செய்யும் பொருட்டுச் சட்டம் செய்கிறதற்காக மிஸ்டர் கோகலே கொண்டுவந்த மசோதாவானது தேசத்திலுள்ள படித்தவர்கள் எல்லோராலும் ஆதரிக்கப்பட்டும் சட்டமாகாமற்போனது படித்தவர்களுடைய தப்பா?" என்று கனம் ஜஸ்டிஸ் அப்துர்ரஹிம் அவர்கள் தமது மறுப்புரையிற் கூறியிருப்பதும், திருமயிலை முனீந்திரர் டாக்டர் சுப்பிரமணிய ஐயரவர்கள் எழுதிய நான்முகத்துடன் வெளிவந்துள்ள இந்தியாவும் சுய ஆட்சியும் என்ற புத்தகத்தில் ஆரம்பக்கல்வி என்ற தலைப்பின் கீழ்வரும் பகுதியும், இந்நகர்த் துரைத்தன உயர்தரக்கல்லூரிப் போதகாசிரியர் ஸ்ரீமான். வீரராகவ ஐயர் அவர்கள் சென்ற வைகாசிமாதச் செந்தமிழ்ப் பத்திரிகையிலே குழந்தைகளின் படிப்பு முறை என்ற தலைப்பின்கீழ் வரைந்திருப்பனவும், சுதேசமித்திரன் பத்திரிகையின் தலையங்கத்தில் ஆரம்பக்கல்வி மசோதா சம்பந்தமாக எழுதப்பெற்றனவும் பிறவும் ஆரம்பக்கல்வி

சம்பந்தமான நமது தற்கால நிலைமையையும், பிற தேசநிலைமைகளையும் ஆராயப்புகும் நம்மவரால் நன்கு கவனிக்கத்தக்கது. விஷயத்தின் அவசியத்தை நோக்க ஒவ்வொன்றையும் இங்கு எடுத்துக் கூற வேண்டியது பொருத்தமாயினும், காலம் இடம் முதலாயவற்றை நோக்கி விரியும் என எண்ணி அவற்றை இங்கே எடுத்துக் கூறவில்லை. நண்பர்கள் அவற்றை அவ்வவ்விடங்களிற் பார்த்துப் படித்து அறிந்துக் கொள்வார்களாக.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

நமது கடமை.

நிற்க, 'உள்ளதைக்கொண்டே ஊராளவேண்டும்' என்றபடி கிடைத்ததைக்கொண்டு நமக்குற்ற நன்மைகளைத் தேடிக்கொள்ள வேண்டியவர்களாக நாம் தற்காலம் இருக்கின்றோமாகையினாலே, எந்தவழியிலே முயன்றால் நமது நாடு அறியாமையினின்று நீங்குமோ அந்தவழியைப் பின்பற்றுவதே மேலானது. ராணுவத்திற்கும், வேறு பலவற்றிற்கும், மிகுத்து வைத்துக் கொடுப்பதற்கும் போனதுபோக ஆரம்பக்கல்விக்கென்று கிடைக்கும் மிகச்சிறிய தொகையைக் கொண்டே நாம் நமது தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டியவர்களா யிருக்கின்றோ மாகையினாலே, அந்தத் தொகையையும் சில வியாபாரிகள் சுகத்திற்கும், அவர்களது சாமான்கள் விலையாவதற்கும் அணையாகக் கொட்டிக்கொடுத்துவிட்டு அதற்குப்பதிலாகக் களிமண் உருண்டைகளையும், கள்ளிக்கட்டைகளையும் வாங்கி நமது பள்ளிக்கூடங்களிலும், பிள்ளைகளிடத்திலும் நிரப்பிவிடலாகாது. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்பது பெரியார்வாக்கு. பரீட்சையில் தேறுவதற்கெனக் கஷ்டப்பட்டுப் புதியமாதிரியிற் படித்துத் தேறியபின்னர்ப் 'பள்ளிக் கணக்கு புள்ளிக்காகாது' என்றபடி பரிதவித்து நிற்பார் பலர் இன்னும் நம் நாட்டிலுள்ளார் என்பது மறக்கக்கூடாதவிஷயம். கனவான்களே, இதனால் நான் தற்காலப் போதனைமுறையை முற்றும் வெறுக்கிறேன் என்பதல்ல. எனினும், தற்கால முறை நமது பழையமுறைக்கு உறைபோடக்காணாதது என்பது மாத்திரம் உண்மையானதே. வேறு பல விஷயங்களிலும், அனுபவித்ததன் பின்னர் 'இப்புதிய முறை பயனற்றது; நமது பழைய முறையே மேலானது' என்று கண்டு நம்மவர் திரும்பிவருவதுபோல் இந்த ஆரம்பக்கல்வி விஷயத்திலும் இம்முறை அடியோடு மாறி நமது பழையமுறை கையாளப்படும் காலம் வெகு சீக்கிரத்தில் வரும் என்று மாத்திரம்

யான் உறுதி கூறுவேன். அக்காலந்தான் நமது நாட்டின் அறிவு-வளர்ச்சிக்கு ஆரம்பக்காலமுமாகும்.

இனி, சில பள்ளிக்கூடங்களில் இருந்துவரும் நாடகம் முதலாயவற்றிற்காகப் பிள்ளைகள் வருத்தப்படுத்தப்படும் வழக்கம் முற்றும் நிறுத்தப் படவேண்டியது மிக அவசியமானது. வருடோற்சவம் முதலிய விசேஷகாலங்களில், அவசியமானால், எவையேனும் நீதிகளைப் புகட்டக்கூடிய சம்பாஷணைகளைப் பிள்ளைகளைக் கொண்டு நடத்திவருதே மேலானது. இங்ஙனமின்றி நாடகங்கள் நடத்தப்படும் வழக்கம் இனியும் கைக்கொள்ளப்படுமானால், காலத்தின் போக்கை நோக்க, அது பெரிதும் விபரீதத்தையே விளைவிக்கும் என்பது அனுபவத்திற்கண்டது. இதுவே பல பெரியோர்களுடைய கருத்துமாகும்.

எண், எழுத்து என்ற இரண்டு முக்கியமானவற்றைப் போதிப்பதே நமது முதற்கருத்தாக இருக்கவேண்டும். வேறு தொழில் முறைகளைப் பயிலத்தக்க புத்திசக்திகளையும், வசதிகளையும்பெற்ற மாணாக்கர்களுக்கு அவற்றைப் போதிக்குந்தொழிலிலே சிறப்பாகப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களைக்கொண்டு தனித்துக் கற்பிக்க வேண்டுமே அன்றி 'எல்லாவற்றையும் எல்லாப்பிள்ளைகளுக்கும் கற்பித்துவிடுவது' என்று மனப்பால் குடித்துக் குட்டை குழப்பி ஒன்றையும் அறியாதவர்களாகப் பிள்ளைகளைச் செய்து விடலாகாது. இவை இவை நம் நாட்டுக் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டியன என்பதையும், இவை இவை கற்பிக்கக் கூடியன என்பதையும், இவை இவை கற்பிக்கப்படாவிடினும் குற்றமில்லை என்பதையும், இவை இவை கற்பிக்கத்தகாதன என்பதையும் ஒரு வகையாகத் தீர்மானஞ்செய்ய வேண்டியவர்கள், நமது தேசத்தினுடையவும் குழந்தைகளினுடையவுமான எதிர்கால முன்னேற்றத்தைப் பெரிதும் விரும்பிப்பாடுபடும் நம்மவர்களாக இருக்கவேண்டுவதே அன்றிப் பிறராக இருத்தல் கூடாது. தங்கள் பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கருதியவும், பரீட்சைசெய்து கைவிடப்படும் தறுவாயில் நமது நாட்டிற்குக் கொண்டுவரப்படுகின்றவும் ஆகிய கிண்டர் கார்ட்டன்; மாண்டசோரி போன்ற வேற்றுநாட்டார் முறைகளையோ பிறமுறைகளையோ 'அவை நமது நாட்டுக்கு எங்ஙனம் பயன்படும்? எத்தகைய பயனைக்கொடுக்கும்?' என்பவற்றைப்பற்றிச் சிறிதும் முற்கூட்டி ஆராயாது 'மேனாட்டார் அனுஷ்டித்தார்கள்; ஆதலின் நாமும் அனுஷ்டித்துப் பார்ப்போம்' என்று சிலர் கூறுவதற்காகவும், நம்மிடமிருந்து வசூல் செய்யப்பட்ட பெருவாரியான தொகையிலிருந்து பகுத்துக் கொடுக்கப்படும் மிகமிகச்சிறிய தொகைக்காகவும் அப்படியே

அவற்றை ஒத்துக்கொண்டு நமது குழந்தைகளையும், உபாத்தியாயர்களையும், தேசத்தையும் இடையூற்றிற் குள்ளாக்கலாகாது.

இவற்றால் எவ்வளவுக்கு நம்மால் நமது பழைய முறைகளைக் கைக்கொள்ளமுடியுமோ அவ்வளவுக்கு அவற்றைக் கைக்கொண்டு ஆடம்பர மின்றி அவரவர்க்குரிய மதசம்பந்தமான போதனைகளுடனே எண் எழுத்து என்ற இரண்டு ஞானக்கண்களையும் திறந்துவைப்பதாகிய போதனையே நம்முடைய குழந்தைகளுக்கு நாம் செய்துகொடுக்கவேண்டிய முதற் கடமையாகின்றது என்பதுவிளங்கும். இதனோடு, பிள்ளைகளுக்குத் தன்னடக்கம், தன்மதிப்பு, தைரியம், சகோதரபாவம், பரோபகாரம் முதலிய நற்குணங்கள் வளரக்கூடிய சாரணர் நிகழ்ச்சி ஏற்படுவதும் விரும்பத்தக்கதாம்.

"பழைய நாளைய இந்தியக்கல்வி முறைகள் விசால திருஷ்டியுடன் தீர்க்கதரிசிகளால் தயாரிக்கப் பட்டவை. ஆனால் பூர்வீக இந்தியாவைப்பற்றியும், பூர்வீக இந்தியக்கல்வி முறைகளைப் பற்றியும் இப்போது நம் உபாத்தியாயர்களுக்குப் பயிற்சிக்காலத்திற் சொல்லிவைக்கப் படுவதில்லை. மற்றத் தேசங்களில் மட்டும் இம்மாதிரி நடந்துவருகிறது. உபாத்தியாயர், மாணவன் இருவரின் கடமைகளும் இன்னின்ன என்பது முதலில் நன்றாய் வரையறுக்கப்படவேண்டும். இரண்டாவது தேகப்பயிற்சி மாணவர்களுக்கின்றியமையாத தென்பதை யாவரும் மறந்துவிடக்கூடாது. தேகப்பயிற்சி விஷயத்தில் நாம் மேனாட்டாரைத்தான் பின்பற்றி நடக்கவேண்டுமென்று விதியில்லை. நமது தேசத்திற்கியற்கையான பல ஒழுங்கான பழக்கவழக்கங்கள் மாணவர்களால் அனுஷ்டிக்கப்படவேண்டும். படங்களின் மூலமாய்ச் சிறுவர்களுக்குக் கல்விகற்றுக் கொடுப்பது அனுஷ்டானத்தில் விசேஷ பலனைத்தருமென்பது என்னுடைய நம்பிக்கை. பாரமார்த்திக சாஸ்திரமும், சன்மார்க்கக்கல்வியும் சிறுவர்களுக்குச் சொல்லி வைக்கப்படவேண்டும். மேனாட்டுக்கல்வி முறைகளைக் குருட்டுத்தனமாய் நாம் அனுசரித்துக்கொண் டிருக்கக்கூடாது. ஜப்பானைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்கொள்வோம் ஆரம்பக்கல்வியை அங்கே கட்டாயமாகவும் இலவசமாகவும் செய்திருக்கிறார்கள். தேசபாஷை அலட்சியம் செய்யப்படுவதில்லை. தொழிற்கல்வி தாராளமாய்ப்போதிக்கப்படுகிறது. விவசாயக் கல்வி வெகு முக்கியமான அம்சமாய்க் கருதப்படுகிறது. ஜப்பான் தேசத்தின் சரித்திரமும் நன்றாய்ப் போதிக்கப்படுகிறது. இராப்பாடசாலைகளும் இதர கல்விவசதிகளும்போதிய அளவு ஏற்பாடுசெய்யப்பட் டிருக்கின்றன. பரீட்சைகள் நடத்தும் முறையும் வெகு திருப்தியா யிருக்கிறது."

என்று கல்வி சம்பந்தமாக, நமது மாகாணத்தார் கைக்கொள்ள வேண்டியனவாக எடுத்துக் காட்டிச் சென்ற வருஷம் மேமாதத்திலே திருச்சியில் நடைபெற்ற பதினோராவது சென்னை மாகாணக் கல்விக் கான்பரென்ஸின் உபசரணைச் சபைத்தலைவர் பிரம்மஸ்ரீ கே. எஸ். ராமஸ்சாமி சாஸ்திரியார் அவர்கள் கூறியிருப்பது நமக்கு முற்றும் பொருந்துவதா யிருக்கிறது.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு." திருக்குறள்.

அதிகாரிகள்.

இவர்கள் ஆரம்பக்கல்வியைப் போதிக்கும் உபாத்தியாயர்களது படிப்பு, பொறுப்பு, நிலைமை முதலாயவற்றைக் கவனித்து அவர்களுக்கு வழிகாட்டிகளாக மாத்திரம் இருப்பது விரும்பத்தக்கதெனப்படுகிறது. இங்கு இந்தியாவில் நடைபெறும் பரீட்சைமுறைகளைப்பற்றி இம்மாத முதல் வாரத்திலே பங்களூரிலே நடைபெற்ற கல்வி மகாநாட்டிலே தலைமை வகித்த மைசூர் ராஜ்ஜியத்தின் வித்தை இலாகாத்தலைவர் ஸ்ரீமான். இராமலிங்க ரெட்டியார்அவர்கள் கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கதே.

ஆசிரியர்களின் நிலைமை.

ஆரம்பக்கல்வியைப் போதிப்பவர்களாகிய உங்களது நிலைமையோ சொல்லத்தரமன்று. பொதுவாக உபாத்தியாயர்களது நிலைமையே இப்படித்தானிருக்கிறது. உங்களில் ஒருவராகிய திருச்சி ஜில்லா உத்தமசேரிபோர்டுஸ்கூல் ஹெட் மாஸ்டர் ஸ்ரீமான். பரிமணப்பல்லவராயர் அவர்கள் உங்களது சம்பளம் முதலியவற்றைத் துரைத்தனத்தார் உயர்த்திக்கொடுக்கவேண்டியதன் அவசியத்தைத் தக்க காரணங்களுடன் வற்புறுத்திச் சென்ற மேமாதத்திய நல்லாசிரியன் பத்திரிகையில் ஆதாரம் எது? என்ற தலைப்பின்கீழ் எழுதியிருப்பது இங்கே கவனிக்கத்தக்கது. நல்லவர்களுக்கும், நல்ல தொழிலைச்செய்துவருகிறவர்களுக்கும் போதிய அளவு சுகத்திற்கான வசதிகள் கிடைக்காமலிருப்பது நியாயமும் தருமமும் ஆகாது. 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்பது பெரியோர்வாக்கு. ஆகவே அனைவர்க்கும் முதன் முதல் எழுத்தறிவிக்கும் தொழிலைக்கொண்ட ஆரம்பக்கல்வியைப் போதிப்பவர்களாகிய உங்களது சம்பளம், பின்னுதவி, வேலைக்காலம், ஒய்வுக்காலம் விடுமுறைக்காலம் முதலாயவற்றைப்பற்றியும் நீங்கள் ஒரு முடிவான அபிப்ராயத்திற்கு வரவேண்டுவது அவசியமானது.

முடிவுரை.

கனவான்களே,

இந்த உபசரணைச் சபையார் ஏழை உபாத்தியாயர்கள் என்பதும்; காலம், உணவுப்பொருள் முதலியவற்றின் விலையேற்றத்தால் மிகக் கொடியதாயிருக்கின்றதென்பதும்; இது ஜன நெருக்கடியான பட்டணம் என்பதும் உங்களுக்கு நன்கு தெரிந்தன. ஆதலில் நாங்கள் உங்களை உபசரிப்பதற்காகச் செய்திருக்கும் ஏற்பாடு மிகக் குறைந்த திட்டமாகவே இருக்குமென்பது வெளிப்படை. ஆயினும், நாங்கள் அன்பாற் குறைந்தவர்களாக இருக்கமாட்டோம் என்பது நிச்சயமானது. ஆகவே, நாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது எங்களது நோக்கத்தை மதித்து எங்களை ஆசீர்வதிக்குமாறு வேண்டுகின்றேன்.

கனவான்களே,

இந்த சமயத்தில் நமக்கு உடனிருந்து புத்திபுகட்டி நல்வழிகாட்டி நம்மை முன்னேற்றுவதற்குத் தலைவராகக் கிடைத்திருக்கும் பெரியாரது பெருமைகளைப்பற்றி நான் உங்கள் முன் கூறப்புகின் அது, பண்டிதர் கூட்டத்துள் 'பால் வெண்ணிறமுள்ளதாயிருக்கும்; சர்க்கரை தித்திக்கும்' என்பதை அரியவிஷயமாகச் சொல்லப்புகுந்தவன் கதையாய் முடியும். அப்பெரியார் உயர்குடிப்பிறப்பினராய்க் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டுக் கீர்த்திபெற்றவர். இத்தகைய பெரியார் நமது மகாநாட்டிற்குத் தலைவராகக்கிடைத்தது நமது பாக்கியம்; நமது நாட்டின் ஆரம்பக்கல்வியின் அபிவிருத்தியைக்காட்டும் அறிகுறி. ஆகவே கனவான்களே, நீங்கள் அனைவரும், நமக்குக் கிடைத்துள்ள அரியபெரிய தலைவரின் ஆணைவழிநின்று நமது தாய்நாடு முன்னேறுவதற்கு முதற் காரணமாகிய மூலாதாரக் கல்வி விஷயமாகவும், அதனைப் போதிக்கும் உங்கள் விஷயமாகவும் போதிய சீர்திருத்தஞ்செய்து கொடுக்கத் துரைத்தனத்தாருக்கும் ஜனத்தலைவர்களுக்கும் துணையாகக்கூடிய பல விஷயங்களை தீர ஆராய்ந்து தக்கதொரு முடிவுக்கு வருவீர்களாக.

முயற்சி திருவினையாக்கும்.

QUEEN MARY READERS

மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

இப்பெயர்கொண்ட புஸ்தகங்கள் ஒன்றுமுதல் ஐந்துவரை வெளிவந்துள்ளன. இவை ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் பெண்களுக்காகவே ஏற்ற முறையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. நம் இந்திய குடும்பத்துக்கு அவசியமாகத் தெரியவேண்டிய அரிய விஷயங்கள் எளிதாகத் தெரியும்படி கூறப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு இனிய பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நம் இந்திய பெண்கள் இப்புஸ்தகங்களை வாசிப்பதால் பல நன்மைகள் விளையுமென்பதில் தடையில்லை. குழந்தைகளைத் தாலாட்டல், விளையாட்டுக் காட்டல், நலங்கிடும் பாடல் முதலியவை பெரிதும் அழகுடன் விளங்குகின்றன. இவ்வாறு பெண்களுக்கெனத் தனியாக முதல் முதல் வெளிவந்த புஸ்தகங்கள் இவைகளே. உபாத்திமார்கள் யாவரும் வாங்கிப்பார்த்துத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்துப் பயன்பெறுவார்களென நம்புகின்றோம்.

விலை—I - 2அ., II - 2அ. 6 பை., III - 3 அ., IV - 4 அ., V - 5அ.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெருவு, சென்னை.

ஆரியமத - - - -
- - - உபாக்கியானம்

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

முதல் பாகம் விலை அணா 8 இரண்டாம் பாகம் விலை அணா 10

ஒவ்வொரு பாகமும் நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட 54 சிறந்த நீதிக்கதைகள் கொண்டது. ஒவ்வொரு கதையும் ஒரு நீதியை நன்கு போதிக்கிறது. ஒவ்வொரு பாகத்திலும் 14 அழகிய ஆப்டோன் படங்கள் அச்சிட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. வேண்டுவோர் எமது ஆபீசுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
35, சின்னத்தம்பி தெரு, சென்னை.